**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.16/2016**

**நாள்.08.04.2026**

**வா.சா. 3- ரெங்கசாமி**

**2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் ஜெயக்குமார் வழக்கறிஞர் என்னை அழைத்து வந்தார். வாதி பாலம்மாள் ராஜலட்சுமியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 50 வருடங்களாக தெரியும். வாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு பழக்கமானவர் உறவு கிடையாது. வாதிகள் என்ன வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் கணபதி வாதிகளின் சொத்தை அபகரிப்பதாக வழக்குப் போட்டுள்ளார். சீனிவாசன் செட்டியார் யாரிடமிருந்து சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் 1988 ல் பாண்டியராஜ், செல்வம், பாண்டியராணி ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கினார். மேற்படி சீனிவாசன் செட்டியார் கிரையம் வாங்கிய ஆவணத்தை நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி சீனிவாசன் செட்டியார் கிரையம் வாங்கிய சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் மேற்படி சீனிவாசன் செட்டியார் பெயரில் உள்ளது 5 சென்ட் பாத்தியம் ஆனால் 2-1/2 சென்ட் என இடம் குறைவாக பட்டாவில் உள்ளது. மேற்படி சீனிவாசன் செட்டியார் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண்.1021/1A, புதிய சர்வே எண்.1411/19, 1411/20, 1411/21. மேற்படி சீனிவாசன் செட்டியார் எப்போது இறந்தார் என்றால் 1996 ல். மேற்படி சீனிவாசன் செட்டியாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மொத்தம் 9 வாரிசுகள், மனைவி பாலம்மாள், மகள் ராஜலட்சுமி, மகன்கள் கணேசன், குமார் மற்றவர்களைத் தெரியாது. மேற்படி சீனிவாசன் செட்டியாருக்கு மேற்படி வாரிசுகளைத் தவிர மற்றவர்களைத் தெரியாது என சொல்லியுள்ளேன் எவ்வாறு நிரூபண வாக்குமூலத்தில் மற்ற வாரிசுகளின் பெயரை எவ்வாறு சொன்னேன் என்றால் அதில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன் நான் தான் கையொப்பம் போட்டேன்.

1997 ல் நடந்ததாக சொல்லக்கூடிய வாய்மொழி பாகப்பிரிவினை யார் யாருக்கிடையே நடைபெற்றது என்றால் குடும்பத்திற்குள்ளாக நடைபெற்றது. வாய்மொழி பாகப்பிரிவினையில் என்ன பேசிக்கொண்டார்கள் என்றால் வாதிகளை வழக்கு தாக்கல் செய்யும்படி இதர வாரிசுகள் சொன்னார்கள். வாதிகள் தவிர கணேசன், லட்சுமி, சண்முகத்தாய், முருகன், ராஜலட்சுமி, விநாயகமூர்த்தி, அண்ணாமலைகுமார் ஆகியோர் சீனிவாசன் செட்டியாரின் சொத்தில் தங்களுக்கு பாகம் வேண்டாம் என கூறவில்லை என்றால் சரிதான் அவர்களுக்கும் சொத்தில் பாகம் உண்டு. மேற்படி 1997 ல் வாய்மொழி பாகப்பிரிவினை நடக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் ஆமாம், உடன் இருந்தேன். மேற்படி 1997 ல் வாய்மொழி பாகப்பிரிவினை எந்த மாதம், தேதியில் நடைபெற்றது என்றால் ஞாபகமில்லை. நான் தாவா சொத்துக்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எனக்கு சொந்த ஊர் சிவலிங்கபுரம் கிராமம் என்றால் சரிதான் ஆனால் நான் கரிவலம்வந்தநல்லூர் வந்து 40 வருடங்கள் ஆகிவிட்டது. நான் நிரூபண வாக்குமூலத்தில் எனக்கு சொந்த ஊர் சிவலிங்கபுரம் கிராமம், நான் கரிவலம்வந்தநல்லூர் வந்து 40 வருடங்கள் ஆகிவிட்டது என சொல்லவில்லை என்றால் எனது ஊர் கரிவலம்வந்தநல்லூர் தான் ஆதார் அட்டை இந்த முகவரியில் தான் உள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனக்கு எனக்கு சொந்த ஊர் சிவலிங்கபுரம் கிராமம் பொய்யாக கரிவலம்வந்தநல்லூர் என சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் மொத்தம் 5 செண்ட், கிழமேல் 13 கெஜம் 39 அடி, தென்வடல் 18-1/2 கெஜம், 55-1/2 அடி. வழக்குச் சொத்திற்கு எந்தப் பக்கம் பிரதிவாதிகள் வீடு உள்ளது என்றால் மேல்பக்கம் உள்ளது பாதை எதுவும் கிடையாது. குருநாத பிள்ளை பத்திரத்தைப் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. கணபதி, குருநாத பிள்ளைக்கு பேச்சுவார்த்தை உண்டா என்றால் பேசிக்கொள்வேன். வாதி வீட்டிற்கு மேல்பக்கம் உள்ள சந்து எத்தனை அடி உள்ளது என்றால் சந்து, பாதை எதுவும் கிடையாது. நான் வழக்கிற்காக பொய்யாக வாதி வீட்டிற்கு மேல்பக்கம் உள்ள சந்து இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி வீட்டிற்கு மேல்பக்கம் உள்ள சந்திற்கு வாதிகள் முற்றிலும் அந்நியர்கள் என்றால் சரியல்ல.  நான் வாதிகளுக்கு உறவினர் என்பதால் வாதிகளுக்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 வது  பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.08 18:46:39 +0530